HMOP.No.150/2024

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 06.02.2026

ம.சா.1–மாரீஸ்வரி த/பெ – முத்தையா

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் சேர்ந்து வாழக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன்.இம்மனுவில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை பற்றி எனக்கு தெரியவில்லை. நானும், எதிர்மனுதாரரும் திருமணத்திற்கு பின்னர் எதிர்மனுதாரர் சொந்த ஊரான வத்ராயிருப்பில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு எனது பெற்றோர் ரூ.3,00,000/–* செலவு செய்ததாக சொல்வது பொய் என்றும், எதிர்மனுதாரர் தான் திருமணத்திற்கான செலவு செய்தார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்னர் எதிர்மனுதாரர் சிவகாசி காலாண்டர் தயார் செய்யும் நிறுவனத்தில் வேலை செய்ததாக யார் என்னிடம் சொன்னார் என்ற விபரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) எதிர்மனுதாரின் தாயார் என்னை மனதளவிலும், உடலளவிலும் காயப்படுத்தியதாக சொல்வது குறித்து காவல்நிலையத்தில் புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரின் தாயார் என்னை கொடுமைப்படுத்தவில்லை என்பதால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த தீப்பெட்டி அலுவலகத்தில் வேலை பார்த்தேன் என்றும், எவ்வளவு சம்பளம் வாங்கினேன் என்றும் எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த வேலைக்கு செல்லவில்லை என்றும், எதிர்மனுதாரர் சம்பளத்தை வாங்கிகொண்டு அவரை நான் கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

3) நான் மருத்துவ சிகிச்சைக்கு எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்று மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த வேலைக்கும் செல்லாமல் எதிர்மனுதாரரை மனதளவிலும் உடலளவிலும் கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை கொடுமைப்படுத்தியதால் தான் எதிர்மனுதாரர் ஸ்ரீவில்லிபுத்தூர், குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி HMOP.No.91/2024 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்துள்ளார், நான் கொடுமைப்படுத்தவில்லை. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) எதிர்மனுதாரர் தாயார் என்னை கொடுமைப்படுத்தியதாக விருதுநகர், அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது சம்மந்தமாக மனு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது தாயார் கொடுமைப்படுத்தி இருந்தால் புகார் கொடுத்தற்கான மனு ரசீதை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. விருதுநகர், அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து எனது சீதன பொருட்களை வாங்கினேன் என்றால் சரிதான், 1 பவுன் மோதிரம் மட்டும் இன்னும் தரவில்லை. எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி அனுப்பிய அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை கொடுமைப்படுத்தவில்லை என்றும், நான் தான் எதிர்மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்றும், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ எடுத்த

நடவடிக்கைகளை உதாசீனப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.